I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W2. (L.W.2)
SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | R. Srinivasan |
| Father Name | : | |
| Occupation | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.09.2025

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்:**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

சம்பவம் 21.03.2006 அன்று நடந்தது. சம்பவம் நடப்பதற்கு முன்பு எங்கு இருந்து போனேன் என்றால் நான் ஆயுத படையில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தேன். striking force உதவி ஆய்வாளர் பொறுப்பில் இருந்தபோது 03.30 மணியளவில் துணை காவல் கண்காணிப்பாளர் சரவணன் அவர்களிடம் ரிப்போர்ட் செய்யும்படி உத்தரவு வந்தது. காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து உத்தரவு வந்தது. எழுத்து மூலமாக உத்தரவு வரவில்லை. போன் மூலமாக தான் வந்தது. எனக்கு தகவல் வந்தவுடன் வேலூர் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தல் சுமார் 03.00 மணிக்கு சென்று ரிப்போர்ட் செய்தோம். சுமார் 5 நிமிடத்தில் போகும் தூரம் தான். 03.30 மணிக்கு சென்று ரிப்போர்ட் செய்து விட்டோம். அங்கிருந்து விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திற்கு போகும் படி அப்போதைய துணை காவல் கண்காணிப்பாளர் திரு. சரவணன் கூறினார். அங்கு மாலை 04.45 மணிக்கு விரிஞ்சிபுரத்தில் ரிப்போர்ட் செய்தோம். துணை காவல் கண்காணிப்பாளரும் எங்களுக்கு பின்னால் வந்துவிட்டார். நாங்கள் எங்கள் striking force க்கென்று ஒரு வேன் உள்ளது.

அதன் மூலம் சென்றோம். அந்த வாகனத்தின் எண். TN 23 G 0394 Eicher வாகனம். எங்கள் மொத்த எண்ணிக்கை 10 பேர். எங்களுடைய டீமில் 1103 ஜீவா, 1291 சத்யநாராயணன், 551 சுரேஷ், 9026 குமார், 1062 ஜகந்நாதன், 1044 சிவாஜி, 1062 அந்தோனிராஜ் என்பவர்கள் தான் தெரியும் மற்றவர்கள் நினைவில்லை. நாங்கள் அனைவரும் சீருடையில் போனோம். அதில் இரண்டு பேர் மட்டும் சாதாரண உடையில் வந்தார்கள். விரிஞ்சிபுரம் காவல் நிலையத்தில் ரெய்டு போக வேண்டும் என்றும் அதற்கான instructions கொடுத்தார்கள். சுமார் 15 நிமிடங்கள் கொடுத்தார்.

எத்தனை மணிக்கு அங்கிருந்து கிளம்பினோம் என்றால் மாலை 05.00 மணிக்கு கிளம்பினோம். சிவநாதபுரம் கைலாய மலை திப்பை என்ற பகுதிக்கு சென்றோம். துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவருடைய பார்டி DSP வாகனத்திலும் நாங்கள் எங்கள் striking force குழுவுடன் சென்றோம். காவல் துணை கண்காணிப்பாளருடன் 4, 5 பேர் வந்தார்கள். அவர்கள் அனைவருமே சீருடையில் இருந்தார்கள். அவர்கள் பெயர் தெரியாது. அவர்கள் வந்த வாகனத்தின் எண் எனக்கு தெரியாது.

கையிலாய திப்பைக்கு சுமார் மாலை 06.00 மணிக்கு போனோம். விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திலிருந்து திப்பை சுமார் 13 கிமீ இருக்கும். எதற்காக போனேன் என்றால் சாராயம் காய்ச்சி கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்களை பிடிக்க வேண்டும் என்று துணை காவல் கண்காணிப்பாளர் instructions கொடுத்தார். அங்கு வீடுகள் இல்லை. அங்கு சுமார் 7 பேர் இருந்தார்கள். நான் பார்த்தேன். நான் எவ்வளவு தூரத்திலிருந்து பார்த்தேன் என்றால் சுமார் 50,60 அடி தூரத்திலிருந்து பார்த்தேன். வாகனத்தை நிறுத்திவிட்டு சுமார் 1.5 கிமீ நடந்து தான் செல்ல வேண்டும். மலை பாதை. நாங்கள் சுமார் 15 நிமிடத்தில் நடந்து சென்றோம். அது ரோட்டிலிருந்து மலை அடிவாரம். அங்கு தான் இருந்தார்கள்.

யார் யார் என்ன என்ன கலர் உடை உடுத்தியிருந்தார்கள் என்று சரியாக

நினைவில்லை. நான் சுமார் 50 அடி தூரத்திலிருந்து பார்த்தேன். தற்போது சரியாக நினைவில்லை. சுமார் 20 வருடங்கள் ஆகிவிட்டது. அங்கு சுமார் 7 நபர்கள் இருந்தார்கள். நான் பிடிப்பதற்கு முன்பு அந்த 7 பேரில் யார் சாராயம் குடிக்கிறார்கள் யார் சாராயம் விற்கிறார்கள் என்று தெரியாது என்றால் சரிதான்.

அந்த பகுதி மலை பகுதி என்றால் சரிதான். அந்த மலை பகுதி எந்த வன சருகத்திற்கு உட்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. எந்த கிராம நிர்வாக அலுவலகத்திற்கு உட்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் ரெய்டு செல்வது குறித்து அந்த கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் தெரிவித்தோமா என்றால் இல்லை. துப்பாக்கியில் சுட்டதாக சொல்லப்படும் நிலையில் அவர்கள் எவ்வளவு தூரத்திலிருந்து சுட்டார்கள் என்றால் சுமார் 20 அடி தூரத்திலிருந்து சுட்டார்கள். நான் துப்பாக்கி எடுத்து செல்லவில்லை.என்னுடன் வந்த டீம் துப்பாக்கி எடுத்து வந்தார்கள். 303 rifle யை 2091 சத்யநாராயணன் என்பவர் எடுத்து வந்தார். 1062 ஜகந்நாதன் என்பவர் Forten Muscut எடுத்து வந்தார். அவர்கள் சுட்டதில் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் தப்பித்து கீழே வீழுந்ததில் தான் காயம் ஏற்பட்டது.

எனக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது. வலது முழங்காலில் காயம் ஏற்பட்டது. அதற்கான காய சான்று எதாவது விசாரணை அதிகாரியிடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் கொடுக்கவில்லை. எங்களை நோக்கி சுட்டது எந்த வகையான துப்பாக்கி என்றாலும் அடையாளம் தெரியுமா என்றாலும் SBML நாட்டு துப்பாக்கி. அந்த துப்பாக்கி எவ்வளவு நீளம் இருக்கும் என்றால் சுமார் 4 அடி உயரம் இருக்கும். அந்த துப்பாக்கியில் வேறு எதாவது அடையாளம் தெரியுமா என்றால் சாதாரணமான நாட்டு துப்பாக்கி போல் தான் இருந்தது. குறிப்பிட்டு அடையாளம் எதுவும் நான் பார்க்கவில்லை.

அதன் பிறகு மணி என்பவர் துப்பாக்கி எடுத்து துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களை aim பார்த்தார். அதற்கு துணை காவல்

கண்காணிப்பாளர் அவர்கள் வேண்டாம் சரணடைந்துவிடுங்கள் என்று எச்சரிக்கை செய்தார். அந்த துப்பாக்கியும் SBML நாட்டு துப்பாக்கி வகையை சார்ந்தது தான். அதுவும் சுமார் 4 அடி இருக்கும். அதிலும் எந்த குறிப்பிட்டு அடையாளங்கள் எதுவும் நினைவில்லை. அந்த துப்பாக்கி அவர்கள் தான் வைத்திருந்தார்கள் என்பதற்கு புகைப்படம் எதாவது எடுத்தோமா என்றால் இல்லை. அந்த துப்பாக்கி அவர்களுடையதுதான் என்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வேறு என்ன பார்த்தேன் என்றால் அங்கு சாராயம் சுமார் 100 லிட்டர் இருந்தது. கொஞ்சம் சாராயம் பிளாஸ்டிக் பாக்கெட்டில் இருந்தது. 100 லிட்டர் சாராயம் டியுப்பில் இருந்தது. அங்கிருந்த லோக்கல் போலீசார் விரிஞ்சிபுரம் உதவி ஆய்வாளர் புகழ் என்பவர் ரூ.150 இருந்ததாக துணை காவல் கண்காணிப்பாளரிடம் சொல்லி கொண்டிருந்தார். சாட்சி சொல்கிறார் வேலூர் தாலூக்கா உதவி ஆய்வாளர் புகழ் ஆகும்.

அந்த ரூ.150 தாள்களை நான் பார்க்கவில்லை. நாட்டு துப்பாக்கி உரிமம் இல்லாத நாட்டு துப்பாக்கி ஆகும். எங்கு வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் வைத்து கொள்ளலாம் என்றால் கள்ளத்தனமாக வைத்திருந்தால் இருக்கும், அதேபோல் இந்த துப்பாக்கி யாருடையது என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் உரிமம் இல்லாத துப்பாக்கி என்பதால் சொல்ல இயலாது. தோராயமாக அந்த இடத்தில் சுமார் 20 சாராய பாக்கெட்டுகள் இருந்தது. அந்த டியுப் கருப்பு நிறமானது. அதன் மீது எதாவது எழுதப்பட்டிருந்ததா என்றால் அதை நான் பார்க்கவில்லை. சாராய பாக்கெட்டுகள் மற்றும் டியுப்பில் இருந்த சாராயத்தை அழித்தார்கள்.

அவர்களை பிடித்த பிறகாவது யாரையாவது சாட்சியாக போட்டார்களா என்றால் நான் பார்க்கவில்லை. நானும் காயம்பட்டவர்களும் மருத்துவமனைக்கு போனோம். அதனால் பார்க்கவில்லை. அந்த சம்பவத்தில் காவல் துணை கண்காணிப்பாளர் சுட்டதில் மணி என்பவருக்கு குண்டு அடிப்பட்டது. சாராய பாக்கெட்டுகள் மற்றும் டியுப்பில் இருந்த சாராயத்தை அதே இடத்தில்

அழித்தார்கள்.

அதன் பிறகு நேராக மருத்துவமனைக்கு போனோம். நானும் அந்தோனி ராஜ் என்ற காவலரும் மருத்துவமனைக்கு சென்றோம். 21.03.2006 ல் சம்பவம் நடந்தது. 24.03.2006 ல் டிஸ்சார்ஜ் ஆகிவிட்டோம். அதன் பிறகு என்னை யாரும் விசாரிக்கவில்லை என்றால் நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருக்கும்போது வாக்குமூலம் எடுத்தார்கள்.DCRB DSP என்னை விசாரித்தார். அடிப்பட்ட நாளிலியே விசாரித்தார்.

நான் சொல்வதை துணை காவல் கண்காணிப்பாளர் கையில் எழுதி கொண்டார். நான் 161 வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டேன். நான் சொல்ல சொல்ல எழுதினார்கள்,. படித்து காண்பித்தார்கள். நான் மருத்துவமனையில் சேரும்போது சுமார் 08.00, 08.30 மணி இருக்கும். உயர் அதிகாரி சொன்னதன் பேரில் நாங்கள் ரெய்டுக்கு போனோம் என்றாலும் எழுத்து மூலமாக உத்தரவு எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் நாங்கள் சென்றது சட்டத்திற்கு முரணானது என்றாலும் சரியல்ல.

நாங்கள் எங்கள் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அங்கு ஆடு மேய்த்து கொண்டிருந்த நபரை தவறுதலாக சுட்டு விட்டார் என்றாலும் அதிலிருந்து தப்பிக்க அவர்கள் மீது அவர்கள் நாட்டு துப்பாக்கி வைத்திருந்ததாகவும் கள்ளச்சாராயம் விற்றதாகவும் அந்த துப்பாக்கியால் இவர்கள் சுட்டதாகவும் பொய் வழக்கு போட்டு மேல் அதிகாரிக்கு இணங்க நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரயில்ல. சாராயம், காசு, துப்பாக்கி அனைத்தும் வழக்கிற்காக எங்கள் அதிகாரிகளால் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய முதல் விசாரணையில் "சாராயம் விற்று கொண்டிருந்த 4 நபர்களும் அங்கேயே இருந்தார்கள் என்றும், அவர்களை விசாரித்தபோது 1,

சடையன், 2. மணி, 3. வெங்கடேசன், 4. முனிரத்தினம் என்று தெரியவந்தது என்று சொல்லியுள்ளேன்" என்றால் சரிதான். அதை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

நான் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அங்கு சென்று விசாரித்தோம் பெயர் சொன்னார்கள் என்று சொல்வது நடக்க இயலாத செயல் என்றால் சரியல்ல, நாங்கள் அனைவரும் அவர்கள் 4 பேரையும் பிடித்துவிட்டோம். அதன் பிறகு அவர்கள் பெயரை சொன்னார்கள்.

பொதுவாக ரெய்டுக்கு போகும்போது அங்கிருந்தவர்கள் அவர்களை பிடிக்க முயற்சி செய்யும்போதும் அவர்களை பிடித்தவுடன் அவர்கள் ஆசுவாசமாக பெயரை சொல்லமாட்டார்கள் என்றாலும் பயத்தில் இருப்பார்கள் என்றாலும் அவர்கள் தப்பி ஓட தான் முயற்சி செய்வார்கள் என்றாலும் சரியல்ல, சாட்சி சொல்கிறார் அவர்கள் துப்பாக்கி வைத்திருந்ததால் அவர்கள் தைரியமாக இருந்தார்கள்.

நான் சொல்வது எதார்த்தில் சாத்தியமில்லை என்றாலும் வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் உருவாக்கப்பட்டது என்றாலும் அப்படி ஒரு சம்பவமே நடக்க வில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் கல் எடுத்து தாக்கியதாக சொல்லயுள்ள நிலையில் கல் யார் மீதும் படவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், சாட்சி சொல்கிறார் ஒதுங்கிவிட்டோம். தாக்கி இருந்தால் அடிப்பட்டிருக்கும் என்றாலும் அடிப்படவில்லை என்று முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, சாட்சி சொல்கிறார் அவர் தாக்கினார் நாங்கள் ஒதுங்கிவிட்டோம். வழக்கிற்காக சமயோஜிதனமாக தற்போது அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல.

போலீசார் விசாரணையில் கல்லை கைப்பற்றியது பற்றி நாங்கள் கூறவில்லை. ரெய்டுக்கு போவதாக சொல்லப்படும் பகுதி மலை பகுதி, கல்,

பெரிய பாறைகளும் இருக்கும். அங்கு நிறைய கல் இருக்கும்போது எறிந்த கல் இதுதான் என்று என்னால் அடையாளம் காட்ட முடியாது என்றால் சரியல்ல, சாதாரண சமதளமான பாறை, அங்கு வீசிய கல்தான் இருக்கும். அது மலை பகுதி அங்கு நிறைய கற்கள் இருக்கும் என்றாலும் நான் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட கல் தான் இந்த கல் என்று தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சமதளமான பாறை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே அ.சா.1 கல்லை கைப்பற்றவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புள்ளி விவரத்திற்கு ரெய்டுக்கு சென்று 4 வது எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு 4 வது எதிரி போகவில்லை என்றாலும் 4 வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்: 04.40 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2025.09.10 10:21:52 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்